2004 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீரில் மிதக்கும் மீனவர்கள் கண்ணீரோடு வாழக்கூடிய அவல நிலையே தொடர்ந்து நீடித்துக் கொண்டிருக்கிறது. இப்படி கண்ணீரோடு வாழ்ந்து கொண்டிருக்கிற மீனவர்களுக்கு, மீன் பிடிக்கச் செல்லாத காலம் என்று, நான்கு மாதங்களாக அரசாங்கம் தடை விதித்திருக்கிறது. அந்த நான்கு மாத காலத்திலே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மணி, மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது. (குறுக்கீடு) மூலக் கேள்விக்குக் கொஞ்சங்கூடச் சம்பந்தம் இல்லை.

வினா எண் 26, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

26—

சுற்றுலா அபிவிருத்தி

***8632—திருமதி எஸ். ராஜம்மாள்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் தூத்துக்குடியில் சுற்றுலா அபிவிருத்தித் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருகிறது. சுற்றுலாத் துறைதான் சுற்றுலா அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அதன்படி, சுற்றுலாத் துறை தூத்துக்குடி துறைமுகத்தை அழகுபடுத்த மாண்புமிகு தமிழக முதல்வர்

இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.10.25 இலட்சம் ஒதுக்கியுள்ளார்கள். தூத்துக்குடி துறைமுகக் கழகமும் ரூ.5.3 இலட்சம் ஒதுக்கியுள்ளது. ஆகமொத்தம், ரூ.15.55 இலட்சத்தில் தற்போது தூத்துக்குடி துறைமுகக் கழகம் கடற்கரையை அழகுபடுத்தி, குழந்தைகள் பூங்கா, குழந்தைகளுக்கான விளையாட்டுக் கருவிகள், சுற்றுலாப் பயணிகள் அமர இருக்கைகள் கொண்ட பூங்கா ஆகியவை அமைக்கப்பட்டு வருகின்றன. தூத்துக்குடியில் உள்ள ரோஸ் பார்க்கில் ரூ.14 இலட்சத்திற்கு படகு இல்லம் அமைக்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ். ராஜம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தூத்துக்குடி தொகுதியானது மூன்று இலட்சம் வாக்காளர்களையும், பல இலட்சம் மக்களையும் கொண்ட தொகுதியாகும். அங்கு மக்கள் பொழுது போக்குவதற்கென்று முயல் தீவு உள்ளது. புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்திலேயே அதைச் சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, நிலுவையில் உள்ளது. தூத்துக்குடி பெரிய துறைமுகம் ஆகும். இந்தத் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி அதிகமாக உள்ளதாலும், வெளி நாட்டவர்களின், சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக உள்ளதாலும், அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அதைக் கொண்டு வந்தால், என் தொகுதி மக்களும், சுற்றுலாப் பயணிகளும் மிக்க மகிழ்ச்சி அடைவார்கள். என் தொகுதி மக்கள் இந்தத் திட்டத்தை ஆவலோடு நீண்ட காலமாக எதிர்பார்க்கிறார்கள்; ஆகவே, அடுத்த ஆண்டிலாவது இந்த அரசு இத்திட்டத்தை ஆய்வு செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தின் சுற்றுலா சிறப்பியல்புகளை பயணிகளுக்கு எடுத்துரைக்க திருநெல்வேலியில் சுற்றுலா அலுவலகம் ஒன்றும், பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் சுற்றுலா தகவல் மையம் ஒன்றும் இயங்கி வருகிறது. பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்மன் நினைவுக் கோட்டையில் சுற்றுலாத் துறையின் மூலம் ஆண்டுதோறும் கட்டபொம்மன் நினைவு நாள் விழா நடத்தப்பட்டு வருகிறது. 1995-96 ஆம் நிதியாண்டில் தூத்துக்குடி மாவட்டம்

திருச்செந்தூரில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதியில் குடில்கள் கட்டுவதற்கு ரூ.28.28 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டு வருகின்றன. திருச்செந்தூரில் அடிப்படை வசதிகள் அபிவிருத்தி செய்தல் திட்டத்திற்கு ரூ.23 இலட்சம் நிதி ஒப்பளிப்பு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்துள்ளார்கள். நவீனக் கழிப்பிடம் கட்ட திருச்செந்தூர் கோவில் நிலம் ஒதுக்கியுள்ளது. பணிகள் பொதுப் பணித் துறை மூலம் துவங்க உள்ளது. தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சி கட்ட பொம்மன் நினைவு கோட்டை தொடர்பாக சுற்றுலா விளம்பர மடிப்பேடும் சுற்றுலாத் துறையின் மூலம் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வெளியிடப்பட்டுள்ளது. நவதிருப்பதி ஆலய இடங்களில் ரூபாய் 18.75 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் திட்டம், தெய்வசெயல்புரத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ரூ.19 இலட்சத்தில் ஏற்படுத்தவும், காயல்பட்டினம் கடற்கரையில் ரூ.30 இலட்சத்திற்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.எஸ். கண்ணன்.

திரு. ஏ.எஸ். கண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொன்னேரி தொகுதியிலுள்ள பழவேற்காடு பறவைகள் சரணாலயம்..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்விக்குத் தொடர்பற்றது.

வினா எண் 27, திரு. கே.எஸ். தென்னரசு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

27—

புதிய அலுவலகக் கட்டடம்

***19413—திரு. கே.எஸ். தென்னரசு:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—